திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, தண்டிக்கப்பட்ட பிறகு சிறைக்கு அனுப்பப்பட்டால், அவர்களுக்குக் கொடுக்கப் படுகின்ற வசதியைப் பற்றி நான் கேட்கவில்லை. அவர்களைக் கைது செய்தவுடனேயே கொண்டுபோய் வைக்கிறார்களே அந்த வரவேற்பு இல்லங்கள் இன்றைக்கு நரகத்திற்கு ஒப்ப இருந்து கொண்டு இருக்கின்றன. அங்கே போலீஸ் காவல் நடந்து கொண்டு இருக்கிறது. ஆகவே, அந்த குழந்தைகளை விசா ரணை முடியும் வரையில் அவர்களுக்கு பாதுகாப்பு கொடுப்பது என்பது ஒன்று. மத்திய சிறையின் சூப்பிரன்டென்ட் அல்லது வேறு ஏதாவது ஜுடிசியல் அதாரிட்டீஸ் கன்ட்ரோலிலே அவர் களை வைத்து தகுந்த பராமரிப்பு கொடுக்க ஏற்பாடு செய்யப் படுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரவேற்பு இல்லங்களில் கண் காணிப்பாளர் என்ற அதிகாரி மூலம் பாதுகாக்கப்பட்டு வரு கிறார்கள். வரவேற்பு இல்லங்கள் சரியான முறையில் அமைக் கப்படவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறி னார்கள். சுகாதாரமான முறையில் இல்லை என்று குறிப்பிட் டார்கள். எந்த வரவேற்பு இல்லத்தில் இத்தகைய நிலை இருக் கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டுச் சொன்னால் அந்த இல்லத்தை சுகாதாரமான முறையில் செய்வதற்கான ஏற்பாடுகளை அரசு நிச்சயம் எடுக்கும்.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, கோயம்புத்தூரில் இப்படி இருக்கிறது என்று ஸ்பெசிபிக்காகக் குறிப்பிட்டேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூரில் இருக்கின்ற வரவேற்பு இல்லத்தில் சுகாதார முறைக்கு மாறுபட்டு இருந்தால், கண்டிப்பாக அதைச் சுகாதாரமான முறையில் செயல் படுத்துவதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்கும்.

இலங்கை அகதிகளுக்கு வீடு கட்டத் தரும் கடன் தொகை

*வினா எண். 299—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு சமூலநலத் துறை, அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இலங்கை அகதிகளுக்கு வீடுகட்ட தரும் நிதியை உயர்த்த மத்திய அரசு உத்திரவிட்டுள்ளதா?

(ஆ) ஆம்எனில் அதன் விவரமென்ன?

(இ) அதனால் எவ்வளவு பேர் பயன் பெறுவார்கள்?

1983 பிப்ரவரி 15]

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) ஆம்.

(ஆ) வீடுகட்டத்தரும் கடன் உதவியை கிராமப்புற பகுதிகளில் ரூ. 3,000-லிருந்து ரூ. 4,000 ஆகவும்; நகர்புற பகுதிகளில் ரூ. 6,000-லிருந்து ரூ. 8,000 ஆகவும் உயர்த்தி 7—7—1982-ல் மத்திய அரசு ஆணையிட்டுள்ளது.

(இ) 7—7—1982-க்குப்பின் 3,822 குடும்பத்தினர் இந்தியா வந்துள்ளனர். இது தவிர சுமார் ஒரு லட்சம் மக்கள் இன்னும் தாயகம் திரும்ப இருக்கிறார்கள். இந்தக் குடும்பங்கள் பயன் பெறும்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அறிவிப்பின்படி நம்முடைய மாநில அரசு எவ்வளவு பேருக்குக் கடன் வழங்கியுள்ளது? அப்படி வழங்கப் படுகின்ற தொகையில் மத்திய அரசு உதவித் தொகை எவ்வளவு என்பதை நான் அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசின் நிதி யுதவியோடுதான் தமிழ்நாட்டில் இதுவரையில் 28,048 இலங்கையில் இருந்து தாயகம் திரும்பியவர்களுக்கு வீடு கட்டுவதற்கான கடனை அளித்து இருக்கிறோம்.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் :

[201—400 எண். உடுக்குறியிடாத வினாக்களையும் விடைகளையும் தனி இணைப்பில் 1—114-ம் பக்கங்களில் காண்க. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகளில் (ஆ) பிரிவில் இனம் 38 ஆக வைக்கப் பெற்றுள்ளது.]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்புகள்.

(அ) நிதிநிலை அறிக்கை அளித்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இந்திய அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 202 (1) மற்றும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 196 (1) ஆகியவற்றின் கீழ் 1983—84-ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை 5—3—1983ஆம் தேதி, சனிக்கிழமை காலை 11.00 மணிக்கு சட்டமன்றப் பேரவைக்கு அளிக்க வேண்டுமென ஆளுநர் அவர்கள் குறித்துள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்